பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

23 09 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

2. மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்களுக்கு வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

4. தமிழகத்தில் நீலகிரி, செங்கல்பட்டு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் 2023ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருதை நடிகர் மோகன் லாலுக்கு அவர் வழங்க உள்ளார்.

சிறந்த இசையமைப்பாளருக்கான விருதை வாத்தி திரைப்படத்திற்கு இசையமைத்த ஜி.வி. பிரகாஷ் குமாருக்கு அவர் வழங்குகிறார்.

சிறந்த திரைப்படத்திற்கான விருது ஹிந்தி திரைப்படமான “12$^{th}$ Fail” திரைப்படத்திற்கு வழங்கப்படுகிறது.

சிறந்த நடிகருக்கான விருது ஜவான் திரைப்படத்தில் நடித்த ஷாருக் கானுக்கும், 12$^{th}$ Fail திரைப்படத்தில் நடித்த Vikranth Massey-க்கும், சிறந்த நடிகைக்கான விருது Mrs. Chatterji Vs Norway திரைப்படத்தில் நடிகை ராணி முகர்ஜிக்கும் வழங்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புடன் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து நாட்டு மக்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ஒரே நாடு - ஒரே வரி என்ற முறை சீரான தன்மையையும், நிவாரணத்தையும் அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி முறையால் பல வரி முறை சிக்கல்களில் இருந்து மக்களும், வர்த்தகர்களும் விடுவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

மக்கள் உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும், உள்நாட்டு உற்பத்தியை வலுவடையச் செய்ய வேண்டும் என்றும் பிரதமர் திரு. மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்களுக்கு வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மாநில சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறு தொழில்முனைவோருக்கு வங்கிக் கடன் அளிக்கப்படுவது தொடர்பாக வங்கிகளின் உயர் அதிகாரிகளுடன் காணொலி காட்சி வாயிலாக அவர் ஆலோசனை நடத்தினார்.

குறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு மானியங்கள் முறையாக வழங்கப்படும்போது, அதற்கு இணையாக வங்கிகளும் கடன்களை உடனடியாக வழங்க வேண்டும் என்று அப்போது அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும், மகளிருக்கு உதவிடும் வகையில் வங்கிகள் எளிதாக கடனுதவிகளை வழங்க வேண்டும் என்றும் திரு. தா.மோ. அன்பரசன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

கட்டுமானத் தொழிலாளர்கள் 50 ஆயிரம் பேருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியை அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. சி.வி. கணேசன், கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாநிலத்தில் தேர்வு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் முன்னணி பயிற்சி

நிலையங்கள் மூலம் இந்த 50 ஆயிரம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ஏழு நாட்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியின்போது ஒவ்வொரு தொழிலாளருக்கும் நாளொன்றுக்கு 800 ரூபாய் வழங்கப்படும் என்று செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆரோக்கியமான மகளிர் - வலுவான குடும்பம் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகளிருக்காக சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே பில்லாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற இந்த முகாமில் பயனாளிகளுக்கு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது இளையோர் நலனுக்கான திட்டங்கள்.

-----------------

*(இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. தொழில் துறை மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கப்பட்டன. வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் சிறப்பு திட்டத்தையும் பிரதமர் கடந்த 2022 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் கீழ் தேசிய அளவில் 16 முகாம்கள் நடைபெற்றன.*

*இதன்மூலம் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புக்கான ஆணைகள் வழங்கப்பட்டன. பிரதமர் திரு நரேந்திர மோடி சுதந்திர தின உரையின்*

*போது, 3 கோடி இளையோருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – மோடி (தமிழ்) . . செகண்ட்ஸ்)*

*வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு நின்றுவிடாமல் இளையோரை தொழில் முனைவோர்களாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தொடங்கப்பட்டதுதான் ஸ்டார்ட் அப் இந்தியா திட்டமாகும். இந்த திட்டத்தின்மூலம் 17 லட்சத்திற்கும் கூடுதலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. முத்ரா கடனுதவி திட்டம் இளையோரை சிறுதொழில் முனைவோராக உருவாக்கியது.*

*இந்த திட்டத்தின்கீழ் இதுவரை 33 லட்சம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இளையோரை வேலைவாய்ப்பை தேடும் நிலையில் இருந்து மாற்றி, வேலைவாய்ப்பை வழங்கும் நிலைக்கு இந்த திட்டம் உயர்த்தியது. (Closing Signature Tune).*

கார்த்தி / வேணி -34

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி, செங்கல்பட்டு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன், கோவை, தேனி, திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களிலும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக கூறினார்.

கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் 2 நாட்களுக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

பாலஸ்தீனம் தனி நாடு என்ற பிரான்சின் அங்கீகாரத்தை அந்நாட்டு அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் ஐ.நா. பொதுச்சபையில் அறிவித்தார்.

**-------------**

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. Marco Rubio-வை நியூயார்க்கில் சந்தித்து இருநாட்டு உறவு குறித்து விவாதித்தார்.

**-------------**

மகாராஷ்டிரா-சத்தீஸ்கட் எல்லையில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் நக்சல் தலைவர்கள் 2 பேர் கொல்லப்பட்டனர்.

-------------

அசாம் மாநிலம் போடோலேண்ட் பிராந்தியத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் 77 புள்ளி 9 சதவீத வாக்குகள் பதிவானது.

-------------

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலின் தாங்குதிறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து சென்னை ஐ.ஐ.டி. குழுவினர், அரசு அதிகாரிகள் மற்றும் இயற்கை ஆர்வலர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தனர்.

-------------

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் அருகே பாதாள சாக்கடை அடைப்பை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 2 பேர் மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

-------------

திருவண்ணாமலை மாவட்டம் மேல்முடியனூரில் வாரிசு சான்றிதழ் பெற லஞ்சம் பெற்றதாக கிராம நிர்வாக அலுவலரை லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் அருகே கடலில் தவறி விழுந்த மீனவர் மீட்கப்பட்டார்.

-------------

வேலூர் மாவட்டம் மகிமண்டலம் அருகே கனமழை காரணமாக ஏரியில் இருந்து வெளியேறிய தண்ணீர் புகுந்து சுமார் 50 ஏக்கர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்தன.

-------------

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழா இன்று அதிகாலை கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது.

-------------

சென்னை பள்ளி மாணவர்களின் புவியியல் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் புவிக் கோளங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ப்ரியா, பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் வழங்கினார்.

-------------

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

இத்தொடரின் முதல் ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--------------

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Karman Kaur - ரஷ்யாவின் Valeria இணை காலிறுதிக்கு முன்னேறியள்ளது.

------------

கொரிய ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று Suwon நகரில் தொடங்கியது.

<<<<>>>>